**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 4/2022**

**Deposition of P.W.** 6

Name : டாக்டர். திரு. ஷாஜி

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated:** 08.10.2025

A5 Present. A1, to A4 absent. Petition filed and allowed.

<u>**முதல் விசாரணை–**</u>

நான் தற்போது தக்கலை அரசு தலைமை மருத்துவமனையில் குடிமை மருத்துவராக பணியாற்றி வருகிறேன். 28.08.2019ம் தேதி காலை 06.35 மணிக்கு நான் பணியில் இருந்த போது காட்டுவிளை, பண்டாரகாலனியை சேர்ந்த ராமகிருஷ்ணன் மகன் அஜின் (27) என்பவரை அவரது தாய் அரை மயக்க நிலையில் வாந்தியுடன் அழைத்து வந்தார். என்ன நடந்தது என்று கேட்ட போது 26.08.2019ம் தேதி அன்று காலை 06.00 மணிக்கு காட்டாத்துறையில் இருசக்கர வாகனத்திலிருந்து போதையில் விழுந்திருக்கலாம் என்று கூறினார். என்ன நடந்தது என்று சயாக தெரியவில்லை என்றும் கூறினார். நான் நோயாளியை பரிசோதனை செய்து வலது கண் பக்கமாக ரத்தக்கசிவு இருந்ததை கண்டேன். முதுலுதவி சிகிச்சை அளித்து ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனைக்கு

.2.

மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தேன். 09.09.2019ம் தேதி அஜின் சிகிச்சை முடித்து வீட்டிற்கு சென்றுள்ளார். அஜினின் மருத்துவ சிகிச்சை சான்று கிடைக்க பெற்று வலது கண் மூக்கோடு சேர்ந்த காயம் கொடுங்காயம் என சான்று வழங்கினேன். அந்த காயச்சான்று அ.சா.ஆ.2. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசார் என்னை 29.08.2019ம் தேதி விசாரித்தார்கள். போலீசார் விசாரணையிலும் தற்போது சொன்ன விபரங்களை தான் சொன்னேன். காயம்பட்டவர் இருசக்கர வாகனத்திலிருந்து கீழே விழுந்து காயம் ஏற்பட்டிருக்கலாம்.

Name : திரு. ஜெயசிங்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated:**08.10.2025

A5 Present. A1, to A4 absent. Petition filed and allowed.

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்போது திருவட்டார் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். 29.08.2019ம் தேதி மேற்படி காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணியாற்றிய போது 29.08.2019ம் தேதி தக்கலை காவல்நிலையத்திலிருந்து கிடைத்த தகவலை பெற்று ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனையில் கிசிச்சையில் இருந்த ராமகிருஷ்ணன் மகன் அஜின் என்பவர் பேசமுடியாத நிலையில் இருந்ததால் அவரது தாயார் ராணி என்பவரை விசாரித்து புகார் மனுவை பெற்று நிலையம் வந்து அதன் தன்மைபடி நிலைய குற்ற எண். 279/2019 பிரிவுகள் 147, 294(பி), 323, 307 506(1) இ.த.ச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பி விட்டு ஒரு நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மருத்துவமனையிலிருந்து சாலை

விபத்து என்று தகவல் கிடைத்ததால் அந்த தகவலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் புகாரை பெற்று வழக்கு பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல.